தொகுதி-8 எண் 2
Vol. 8 No. 2

***Chief Editor***
*Dr. M. Sadik Batcha*

***Advisory Editor***
*Dr. N. Chandra Segaran*

***Editorial Board***
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr. M. Pandi*
*Dr. G. Stephen*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr. Vaani Arivalan*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. S. Thangamani*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

பங்குனி - ஆனி 2051
April - June 2020

ISSN : 2321-984X

# நவீனத் தமிழாய்வு

*(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)*

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

***Published by***
**RAJA PUBLICATIONS**
**No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,**
**Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.**
**Mobile : 9600535241**
**Website : www.rajapublications.com**

**24** பகுதி-5
Part -5

| | | |
|---|---|---|
| 167. ப. கற்பகராமன் | திருமுருகாற்றுப்படை மற்றும் கந்தரலங்காரத்தில் உறவுமுறை ஒப்பீடு | 1093-1096 |
| 168. ஆ. சந்திரசேகரன் | திருமூலரும் மகப்பேறு மருத்துவமும் | 1097-1100 |
| 169. அ. அசோகன் | பண்டைய தமிழரின் நம்பிக்கைகளும் சகுனங்களும் | 1101-1103 |
| 170. பெ. தீபா | பெரியபுராணம் குறிப்பிடும் அனல்வாதம்-புனல்வாதம்-ஓர் ஒப்பீடு | 1104-1106 |
| 171. கு. கருமுருகானந்தராஜன் & மோ.கோமதி | நீர் நிலைகளின் பயன்களும், பாதிப்புகளும் | 1107-1110 |
| 172. ஆ. இன்பவள்ளி | நாட்டுப்புற இலக்கியத்தில் சமுதாயப் பண்பாடுகள் | 1111-1114 |
| 173. கு. ரேவதி | குமாரபாளையம் மாரியம்மன் திருவிழாவும், சமூகப் பண்பாட்டு விழுமியங்களும் | 1115-1117 |
| 174. வா.கவிதா | பெருங்கதையும் தொல்காப்பியமும் உணர்த்தும் எண் வகை மெய்ப்பாடுகள் | 1118-1122 |
| 175. ஆ. கவிதா | திருமந்திரமும் திருக்குறளும் ஓர் ஒப்பீடு | 1123-1126 |
| 176. மு.மெய்வேல் | எட்டுத்தொகை-குறிஞ்சித்திணையில் மகளிர் ஒழுக்கம் | 1127-1135 |
| 177. ஆ.முருகன் | கந்தபுராணம் திருமுருகாற்றுப்படை ஓர் ஒப்பீடு | 1136-1139 |
| 178. க.நித்யா | குறுந்தொகையில் பண்பாட்டுச் சிந்தனைகள் | 1140-1144 |
| 179. இரா.பிரீத்தி | திருப்புகழ், கந்தரநுபூதி, கந்தன் கருணை, முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் - ஓர் ஒப்பாய்வு | 1145-1147 |
| 180. பெ.கு. பிரேமா | பெரியபுராணம் உணர்த்தும் பண்பாடு | 1148-1150 |
| 181. ரா. ரவிச்சந்திரன் | புறநானூற்றில் தமிழர் பண்பாட்டு நிகழ்வுகள் | 1151-1154 |
| 182. செ.ரேவதி | அக்கினிப் பறவைகள் புதினத்தில் பண்பாட்டுக் கூறுகள் | 1155-1158 |
| 183. ரா.ம. ரேவதி | கம்பனில் தொல்காப்பியச் சுவடுகள் | 1159-1161 |
| 184. ச. இந்திரா | தோடர் இன மக்களின் இசையும் ஆட்டக் கலையும் | 1162-1165 |
| 185. ப. செல்வமணி | தமிழர் பண்பாடு | 1166-1169 |
| 186. த.சிவானந்தம் | வேதாத்திரி மகரிஷியின் அறச்சிந்தனைகளும் வள்ளுவரின் அறச்சிந்தனைகளும் - ஒப்பீடு | 1170-1175 |
| 187. செ. தங்கராஜ் | எட்டுத்தொகையும் பண்பாடும் | 1176-1181 |
| 188. இரா. உமாதேவி | பத்துப்பாட்டில் தமிழர் பண்பாடு | 1182-1185 |
| 189. மா. வசந்தகுமாரி | தொல்காப்பியமும் சங்கக் கருத்தாடலும் | 1186-1190 |
| 190. செ. யமுனா | கலைக்கு உடல் ஊனம் ஒரு தடை இல்லை | 1191-1193 |
| 191. ச. லதா | திருக்கோவையார் காட்டும் களவொழுக்கப் பண்பாடு | 1194-1197 |
| 192. சீ. அகல்யா | ஒப்பீட்டு நோக்கில் பொருள்கோள் | 1198-1202 |

Published by : **Raja Publications,** No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House,** Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

# திருப்புகழ், கந்தரநுபூதி, கந்தன் கருணை, முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் - ஓர் ஒப்பாய்வு


இரா. பிரீத்தி

பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,

விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி(தன்னாட்சி),

எளையாம்பாளையம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.


## முன்னுரை

முருகு என்பதற்கு அழகு என்றொரு பொருள் உண்டு. முருகப்பெருமானை குமரன் என்றும் அழைப்பர். தமிழின் மறு உருவம் முருகன். மும்மூர்த்திகளின் சொரூபம் ஆவார். "மு" என்பது முகுந்தன் என்றும் "ரு" என்பது ருத்திரன் என்றும் "க" என்பது கமலாசனன் என்றும் போற்றப்படும் பிரம்மனின் பெயராகும் ஆகையால் முருகப்பெருமானை வணங்குவது அந்த மும்மூர்த்திகளை ஒருசேர வணங்குவதற்கு சமம்.

## அருணகிரியின் வேண்டுகோள்

குமரனே! பிறையைச் சடைமுடியில் சூடியுள்ள சிவனாரின் குருபோல அமைந்து சிறந்த உபதேச மொழியைப் போதித்த மயிலோனே என்று உன்னை உருகி வணங்காமல் தன்வலையில் விழவைக்கும்படி வசீகரம் செய்யும் முகத்தை மினுக்குபவர் வேசையர்கள் அவர்கள் பால் என்மனம் செல்லாமல் உன்னையே நாடி போற்றும்படி அருள்புரிவாயாக.

## திருப்புகழ் கூற்று

போர் செய்யக் கருதி அசுரர்களுடைய படை போர்க்களத்தில் எதிர்த்தபொழுது ஒருநொடிப் பொழுதில் அந்த அசுரர்களுடைய படைகள் அழிய வேலைச் செழுத்திப் பூமியில் அசுரர்களுடைய தலைகள் உருளும்படி செய்தவனே. தாகத்தோடு பேய்கள் நடனம் செய்ய வீரபத்திரர்கள் கர்ச்சனை செய்ய மாமிசத்தை உண்டும் ரத்தத்தைக் குடித்தும் காளி கொக்கரிக்க, சதை உணவில் மகிழ்ச்சிக்கொள்ளும்படி பேயின் வரிசை கூட்டங்கள் பேரொலி எழுப்ப, நரி, காகங்கள், கழுகு இவைகள் ஆடித்திரிய, ரத்தவெறியால் பயிரவர்கள் சுழன்று திரிய ஒப்பற்ற வேலாயுதத்தை செலுத்தின இறைவனே

## கலிங்கத்துப்பரணி கூற்று

கலிங்கப்போரும் அவ்வாறே இருந்தது போரில் இறந்த கலிங்க வீரர்களைப் பேய்கள் கூழ்சமைத்து வயிறு புடைக்க உண்டது. கழுகுகளும் அம்புதைத்த வீரர்களின் உடலைக் கொத்தி உண்ண காயம் ஏற்பட்டு இறந்துபோனது. இவ்வாறு குலோத்துங்க சோழனுடைய அமைச்சர்களில் முதன்மையான கருணாகரனின் வீரம் அமைந்திருந்தது.

## முத்தம் தருவாயாக

"மடிமீதடுத்து விளையாடி நீத்த
மணிவாயின் முத்தி தரவேணும்"[01] - திருப்புகழ்

இறைவா என் மனைவியின் கர்பத்தில் தரித்து இப்பூமியில் அவதரித்தப் பின் நான் உன்னை மிகவும் ஆசையுடன் உச்சிமோந்து கண்ணில் ஒற்றிக் களிக்கும்படியும் முகமோடு முகம் வைத்துக் களிக்கும்படியும், எனது மலையன்ன புயங்களில் நீ உறவாடி மடிமீது அனைந்து விளையாடி, நாள்தோறும் உனது அழகிய திருவாயால் முத்தம் அளித்தருள வேண்டும்.

## பிள்ளைத்தமிழில் முத்தப்பருவம்

குழந்தையின் 11-வது மாதத்தில் நிகழும் இப்பருவத்தில் குழந்தையினை அதன்பெருமைகளைச் சொல்லித் தாய், தந்தை

முதலானவர்கள் முத்தம் தரும்படியாக வேண்டுவார்கள்.

"முருகு நாறுஞ் செங்கனிவாய்
முத்தந் தருகமுத்தமே
மும்மைத் தமிழ்த்தேர் கந்தபுரி
முருகாமுத்தந்தந்தருளுகவே"[02]

ஒளிவீசுகின்ற வளையல்களை அணிந்த செந்தளிரினைப் போன்றத் திருக்கைகளும், கொடியினைப் போன்றதான மிக நுட்பமான இடையினையும் கொண்டு உயர்ந்த சிகரங்கள் நிறைந்த இமய மலையினில் உயர்ந்த பூங்கொடியாக விளங்குகின்றவளான உமையம்மையும், தேனைச் சிந்திடக்கூடியதான தாமரை மலர்களுடன் நறுமணம் கமழ்ந்திடக் கூடிய துளசி மாலைகளும் சேர்ந்து மணம் வீசிடக் கூடியவர்களான பிரம்மா, விஷ்ணு, இருவரின் தலைமாலைகளையும் அணிந்திருக்கக்கூடிய பெரிய தோள்களை உடைய உன்னுடைய தந்தையான சிவபெருமான் பார்த்துப் பார்த்துப் பெரிய கண்களில் மகிழ்ச்சி நிறையும்படியாகக் குராமலர்கள் விரித்து வாசம் வீசுகின்ற அவருடைய மேனியில் அழகான இனிய குதலை மழலைகள் முதிர்ந்து அமுதம் போன்று சுரந்திடக் கூடிய பசுமையான தேனானது துளிர்த்திடக் கூடிய தெய்வத்தன்மையும் தெய்வ மணமும் வீசுகின்ற தேன் மணக்கும் உன்னுடைய செங்கனியினைப் போன்ற அழகு வாயினால் முத்தம் தருவாயாக என்று குமரகுருபரரும் குழந்தை முருகனிடம் கெஞ்சிக் கேட்கின்றார்.

திருவடி புகழ்

"தெருளுறு மன்பர் பரவ விளங்கு
திரிசிர குன்றில் முதனாளில்
தெரிய இருந்த பெரியவர் தந்த
சிறியவ அண்டர் பெருமாளே"[03]-திருப்புகழ்

என்னுடைய தீய எண்ணம் நீங்கி, மனதுருகி உன்னுடைய திருவடிகளை என்று நான் புகழ்வேன். காதலுடன் சென்று மலையில் தினைப்புனத்திற்கு காவல் கொண்ட மயில் போன்ற சாயல் கொண்ட அழகு வள்ளியை திருமணம் புரிந்த வேலனே! எங்கள் வயலூரில் எழுந்தருளிய முருகனே! தெளிந்த அறிவையுடைய அன்பர்கள் போற்ற விளங்குகின்ற திரிசிராமலையில் ஆதிநாள் முதலாக வீற்றிருக்கும் பெரியவர் தாயுமானவரும் சிவபெருமானும் தேவர்களும் போற்றும் பெருமாளே! உன் இணையடி என்று புகழ்வேனோ என்று அருணகிரியார் ஏங்குகிறார்.

முருகன் திருவடிப் பெருமை

மதுரையின் மீனாட்சிக்குப் பிறகு ஆட்சிப் புரிந்தது உக்கிரகுமார பாண்டியன். இது முருகனின் அவதாரமேயாகும்! அப்பொழுது பெரும் கடல் கொந்தளிப்பு வந்தது! உக்கிரகுமார பாண்டியன் தன் கை வேலை வீசி எறிந்தான். கடல் கொந்தளிப்பு அடங்கி மதுரை காக்கப்பட்டது!

சூரபத்மன் முருகனுடன் மாயப்போர் புரிந்தான். கடல்நடுவே மாமரமாகி நின்றான். முருகனின் சக்திவேல் மாமரத்தைப் பிளந்து இருகூறாக்கியது!

கிரவுஞ்சகிரி என்ற மலை முருகனை எதிர்த்தது. முருகன் கைவேலால் கிரவுஞ்சகிரி மலையைப் பிளந்தான். இம்மூன்று செயல்களையும்,

நின் கைவேல் பட்டழிந்தது வேலையும் சூரனும், வெற்பும்'

என்ற வரிகள் கடலையும் மலையையும் அழித்தத்திறன் வெளிப்படுத்தப்படுகிறது.

"சேல்பட்டழிந்தது செந்தூர் வயல்பொழில் தேங்கடம்பின்
மால் பட்டழிந்தது பூங்கொடியார் மனம் மாமயிலோன்
வேல்பட்டழிந்தது வேலையும், சூரனும், வெற்பும் நின்
கால் பட்டழிந்து இங்கு என் தலைமேல் அயன்கைஎழுத்தே"[04] - கந்தரலங்காரம்

முருகன் திருவடிப் பெருமை

முருகனின் திருவடி அருணகிரியாரின் தலையில் லேசாகப் பட்டவுடன் அவர்

தலையெழுத்தே மாறிவிட்டதாம்! இதனால்தான் முருகன் அடியார்களெல்லாம் தங்கள் தலைமீது திருவடிபட வேண்டினர். கந்தன் காலடியை வணங்குவோம் நம் தலைமீதும் அவன் திருவடி படட்டும் நம் தலையெழுத்தும் மாறட்டும் தினமும்.

**"குமரேசா் இருதாளும் சிலம்பும், சதங்கையும், தண்டையும் கடம்பும் சண்முகமும் எனக்கு முன்னே வந்து தோன்றட்டும்"** [05]

திருவடி வணங்கிட

"கருதா மறவா நெறிகாண எனக்கு
இருதாள் வனசம் தர என்று இசைவாய்
வரதா முருகா மயில்வாகனனே
விரத அசுரசூர விபாடணனே"[06].-கந்தரநுபூதி

அடியார்கள் கேட்கும் வரங்கள் யாவற்றையும் அருள்பவரே! முருகப்பெருமானே! மயிலை வாகனமாகக் கொண்டவரே! நினைப்பும் மறப்பும் இல்லாத வழிதனை அறிந்திட அடியேனுக்கு உம்மிரு பாதத் திருவடிகளாகிய தாமரை மலர்களைத் தந்தருள எந்தநாளில் இசைந்திடுவீர்? என முருகப்பெருமானிடம் அருணகிரியார் வேண்டுகிறார்.

திருச்செங்கோடு

"சென்றே யிடங்கள் கந்தா எனும்பொ
செஞ்சேவல் கொண்டு வரவேணும்
செஞ்சாலி கஞ்ச மொன்றாய் வளர்ந்த
செங்கோடமர்ந்த பெருமாளே"[07] -திருப்புகழ்

அன்பாக வந்து உனது தாளைப் பணிந்து ஐம்பூதங்களும் ஒருவழிபட்டு உன்னை நினையாமல் பெண்களை நினைத்துக்கொண்டு மனதை ஒருநிலைபடுத்தி வணங்காமல் விடுவேனோ! சபையில் நடனம்புரியும் சிவபிரான் தந்த குமரனே! மிக்க வாசனை நிறைந்த கடப்பமலரை அணிபவனே! உன்னை வணங்கி பணிந்து நின்ற அடியார்களின் பாவத்தைத் தொலைக்கும் கூரிய வேலனே! செல்லும் இடங்களில் எல்லாம் கந்தா என்று நான் அழைக்கும்பொழுது, செவ்விய சேவலை ஏந்தி அடியேன் முன் வர வேண்டும். செந்நெல்லும் தாமரையும் ஒன்றாக வளரும் திருச்செங்கோட்டில் வீற்றிருக்கும் பெருமாளே!

செங்கோட்டு வேலவன்

திருநகரி பிரதிவாத பயங்கரன் என்னும் புலவர்பால் வரவிருந்த ஆபத்தை நீக்கி அருள் புரிந்த வேலப்பர் ஆவார். குணசீலர் என்பவர் தன்னுடன் வாதம் செய்ய வரும் பிரதிவாத பயங்கரனிடமிருந்து தன்னைக்காக்க முருகப்பெருமானை வேண்ட மாடு மேய்க்கும் சிறுவனாய் வர பயங்கரன் குணசீலரிடம் வாதம் செய்ய எண்ணியவாறே அவ்வழியே செல்ல அப்போது அவர் கண்ணுக்கு திருச்செங்கோட்டு மலைசர்ப்பம் போல் தோன்றியது உடனே கட்டளைக் கலித்துறையில் பாடல் ஒன்றை பாடலானார்.

"சமர்முகத்திருச் செங்கோடு சர்ப்பசயிலம் என்ன
அமரில் படம்விரித்து ஆடாது என்னை"

என்று அடி தொடங்கி முடிக்க முடியாமல் திணற அங்கு குமாரப்பெருமான் மாடு மேய்க்கும் சிறுவனாய் முடிக்க முடியாத பாடலுக்கு.

**"நமரன் குறவள்ளி பங்கன் எழுகரை நாட்டுயர்ந்த
குமரன் திருமுருகன் மயில் வாகனம் கொத்தும் என்றே"**[08]

கந்தன் கருணை முடித்துக் கொடுக்கவியந்த புலவர் சிறுவனிடம் யாரப்பா நீ? என்று விசாரிக்க குணசீலர் என்ற புலவரின் சீடர் என்று கூற மாடு மேய்க்கும் சிறுவனுக்கே இத்துணை புலமையென்றால் குணசீலர் எத்துணை சிறப்பு மிக்கவராய் இருப்பார் என்று எண்ணி பயங்கொண்டு ஓடிவிட்டார்.

முடிவுரை

இவ்வாறாக முருகப்பெருமானும் பிற அடியார்களும் போற்றிப்புகழ்ந்துள்ளனர் என்பதையும் தன்பக்தர்களைக் காக்க வேலவன் கூப்பிட்டக்குரலுக்கு வரக்கூடியவன் என்பதும்

புலனாகின்றது அவனுடைய புகழைச் சொல்லிக்கொண்டேப் போகலாம் ஆனால் அவன் புகழ் எல்லைக்கும் அப்பாற்பட்டது

**அடிக்குறிப்புகள்**

1. கலிங்கத்துப்பரணி, செயங்கொண்டார், ப.எண்.271.
2. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் - குமரகுருபரர், உரையாசிரியர் கமலாமுருகன், ப.எண்.75.
3. முருகன் திருவடிப்பெருமை -புலவர் எம்.எஸ்.சுப்பிரமணியம் எம்.ஏ.,பிஎட்., ப.எண்.39.
4. கந்தரநுபூத, அருணகிரிநாதர், ப.எண்.55.
5. கந்தன்கருணை, கிருஷ்ணதாசன், ப.எண்.232.


**துணைநூற்பட்டியல்**

**முதன்மை ஆதாரம்**

அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ், உரையாசிரியர் தணிகை மணி வ.சு. செங்கல்வராய பிள்ளை, உமா பதிப்பகம், 18/171, பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை- 600 001, தொலைபேசி எண் - 25215363

**துணைமை ஆதாரங்கள்**

1. கலிங்கத்துப்பரணி - செயங்கொண்டார் - தெளிவுரை புளியூர் கேசிகன், பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை. 600 108
2. உரையாசிரியர் கமலாமுருகன் - முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், சாரதா பதிப்பகம் 4, சாந்தி அடுக்கம், 3 ஸ்ரீகிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை- 14. தொலைபேசி எண் - 044 - 28443791
3. முருகன் திருவடிப்பெருமை -புலவர் எம்.எஸ்.சுப்பிரமணியம் எம்.ஏ.,பிஎட்., கங்கை புத்தக நிலையம் 23, தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை - 600017
4. கந்தரநுபூதி-அருணகிரிநாதர் - உரையாசிரியர் அங்கமுத்து முதலியார், குறிஞ்சி 20, டீச்சர்ஸ் கில்ட் காலனி (ஆசிரியர் சங்க குடியிருப்பு) இராசாசி நகர் விரிவு, வில்லிவாக்கம், சென்னை- 600 049
5. கந்தன்கருணை-கிருஷ்ணதாசன், விநாயகா பப்ளிகேஷன்ஸ், 21/1, கௌடியாமடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை-600 014, தொலைபேசி எண் - 8132033


ஓ